## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 350/2019 | Date : 27.03.2024 | DW1 |
|---|---|---|
| Name: கணேச்ன | S/o. **வீரப்பன்** | |
| Evidence Recorded Time: 12.15 P.M. to 1.35 P.M | | |

**6–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் 6–ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த சொத்தை நான் வாங்கும் முன்பு தேவராஜ் என்பவரின் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்தது என்றால் சரிதான். 1980 ல் அவருக்கும் அவரது சகோதரர் வாதிக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை அடிப்படையில் 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்தானது ச.எண்.1245/5 என்றால் சரிதான். மேற்படி சொத்தின் கிழபுரம் தென்வடலாக வாதி மற்றும் 1 ம் பிரதிவாதிக்கு பொது வாய் பாத்தியப்பட்ட 16 அடி ரோடு போகிறது என்றால் சரிதான். மேற்படி பொது ரோட்டில் கிழபுரம் ராமசாமி குடும்பத்தார் செல்லக் கூடிய மற்றொரு ரோடு உள்ளது என்றால் சரிதான். ச.எண்.1245/5 க்க வடபுரம் நான் சுவாதீனத்தில் இருந்த காலத்தில் கம்பி வேலி அமைத்துவிட்டேன் என்றால் சரிதான். மேற்படி ச.எண்ணின் வடபுரம் தேவராஜன் மற்றும் ஈஸ்வரன் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட கிணறு அமைந்துள்ளது என்று சொன்னால்சரிதான். மேற்படி ச.எண்.4 ஐ சுற்றி தென்னை மரம், ஆரஞ்சு மரம் இருந்தது என்றால் சரிதான். மேற்படி ச.எண்ணின் மேற்குபுரம், வடபுரம் , கிழபுரம் ச.எண்.1245/3 உள்ளது என்றால் சரிதான். ஈஸ்வரன் என்பவரின் நிலம் ச.எண்.1245/3 க்கு வடபுரம் 1245/1 ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி ச.எண்.1245/3 ல் உள்ள நிலம் அவருடைய சித்தப்பா விடம் இருந்து ஈஸ்வரன் மகன் பெயரில் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற செந்தில்குமார் 1245/5 சொத்தில் 26.11.2020 ம் தேதி கிரையபத்திரத்தின் படி சுவாதீனம் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி செந்தில் குமார் நிலத்தை கிரையம் பெற்ற பின்பு ச.எண்.1245/5 ல் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து அதற்கு புதிதாக மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றால் சரிதான். நானோ, எனக்கு விற்பனை செய்த தேவராஜன் குடும்பத்தாரோ பொதுப்பாதை மற்றும் கிணறு பாகம் உத்தி வாரி பாகத்தில் எந்த தொந்தரவும் செய்யவில்லை என்றால் இது வரை இல்லை.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை –

வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியுமா என்றால் தெரியும். 16 அடி வழிபாத்தியம் வேண்டும் என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு வழக்கின் சங்கதிகளை

படித்து பார்த்து தான் நானும் 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் சேர்ந்து பதிலுரை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்த வாதியின் சகோதரர் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் ஆதியில் முக்தாகவுண்டர் என்பவருக்கு பாகம் மூலம் கிடைக்கப்பட்டது என்றால் பூர்வீக சொத்தாகும். மேற்படி முக்தா கவுண்டர் ஆலமரத்பட்டி கிராமத்தில் 7 ஏக்கர் 57 செண்ட் பாத்தியப்ட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி முக்தாகவுண்டர் 7 ஏக்கர் 57 செண்ட சுவாதீனத்தில் உள்ளார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி முக்தாகவுண்டரின் வாரிசுகள் தான் வாதியும் 1ம் பிரதிவாதியும் என்பது தெரியுமா என்றால் தெரியும். மேற்படி முக்தாகவுண்டருக்கு காவேரி அம்மாள் என்ற மனைவியும் 4 பெண் வாரிசுகளும் உள்ளார் என்பது தெரியுமா என்றால் தெரியும். அவருடைய இறப்பிற்கு பின் அவருடைய மனைவி, பெண் வாரிசுகள் சேர்ந்து கண்ணாமூச்சி கிராமத்திலும் ஆலமரத்துபட்டி கிராமத்திலும் பாத்தியப்பட்ட சொத்தை 1982ல் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் இ செட்டியூல் சொத்து வாதிக்கும் எப் செட்டியுல் சொத்து 1ம் பிரதிவாதிக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டதுஎன்றால் சரிதான். ச.எண்.641–ல் 4 ஏக்கர் 75 செண்ட் வாதிக்கு ஆலமரத்துபட்டி கிராமத்தில் ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி கிராமத்தில் பிரதிவாதிக்கு அதே ச.எண்ணில் 2 ஏக்கர் 82 செண்ட் நிலம் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பத்திரத்தில் தேவராஜனுக்கு பாகம் ஒதுககப்பட்ட நிலத்தில் வாதி ஈஸ்வரனுக்கு 20 பலன் தரும் தென்னை மரங்களும் 2 கொழிஞ்சி மரங்களும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. நான் கிரையம் பெற்ற பிறகு மேற்படி தாவா சொத்து சம்மந்தமான மூல ஆவணங்கள் அனைத்தையும் பார்த்தேன் என்றால் பார்த்தேன். மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை தான் நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். பாகப்பத்திரத்தில் கிணறு பாகத்தில் வாதிக்கு 6ல் 2 பங்கும் 1ம் பிரதிவாதிக்கு 6ல் ஒரு பங்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 5 எச்பி பம்பு செட்டில் வாதிக்கு 3ல் 2 பங்கும் 1ம் பிரதிவாதிக்கு 3ல் 1 பங்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தின் படி ஆலமரத்துப்படி கிராமத்தில் 4 ஏக்கர் 75 செண்ட் நிலமும் கண்ணாமூச்சி கிராமத்தில் 1 ஏக்கர் 3 செண்ட் நிலமும் ஒதுக்கப்பட்டது என்றாலும் மொத்தம் 5 ஏக்கர் 78 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றாலும் சரிதான். பாகப்பத்திரத்தில் 1ம் பிரதிவாதிக்கு மேற்படி கிராமங்களில் மொத்தம் 6 ஏக்கர் 30 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 1982 பத்திரப்படி பொது ஷரா என்று தனியாக காட்டப்பட்டுள்ளது என்றும் அதை படித்து பார்த்துதான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி பொது ஷரா வில் தேவராஜன் பாக நிலத்தில் இருந்து ஈஸ்வரன் பாக நிலத்திற்கு வண்டி வாகனம் ஓட்டி செல்ல 16 அடி அகலம் உள்ள வழி தடம் மேற்சொன்ன பாகஸ்தர்களுக்கு பொதுவானது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால்

சரிதான். தேவராஜன் நிலமும், ஈஸ்வரன் நிலமும் ஒன்றுக்கு ஒன்று சேர்ந்து இருப்பதால் இரு நிலத்திற்கும் போக வர பாத்தியம் உண்டு என்று பத்திரத்தில் சொல்லப்பட்டது என்று சொன்னால் சரிதான். வாதி 20.09.1994 செங்கோடகவுண்டர் என்பவரிடம் இருந்து 8 ஏக்கர் 12 செண்ட் நிலம் கிரையம் வாங்கியது தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி செங்கோடகவுண்டரும், முக்தாகவுண்டரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் அது பற்றி தெரியாது. 1.11.2004 ல் வாதி செங்கோடகவுண்டரிடம் இருந்து வாங்கிய நிலத்தை தன் மகன் பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தது தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி வண்டி தடத்தில் பிரச்சினை செய்தார் என்ற வாதி 1ம் பிரதிவாதி பெயரில் மாவட்டஉரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.323/2004 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி வழக்கு 18.08.2008 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் அந்த தீர்ப்பின் மீது இந்த நீதிமன்றத்தில் AS 5/2011 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது 15.02.2015 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

**ஒம்/–DW1**

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.